# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 27.11.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

சென்ற சில ஜுமுஆக்களில் திருக்குர்ஆன் வசனங்கள் மூலமாக அல்லாஹ்வின் **வலி** – நண்பன், பாதுகாவலன் என்ற பண்பு குறித்து அல்லாஹ் எவ்வாறு ஒரு **வலி** ஆக இருக்கிறான் என்பதை விளக்கி வருகிறேன்.

அல்லாஹ் எவ்வாறு வலியாக இருக்கிறான். மனிதன் எவ்வாறு ஒரு வலியாக மாற வேண்டும் என்பதனையும் விளக்கி வந்தேன். அல்லாஹ்வின் நெருக்கத்தின் மிக உயரிய தகுதி எல்லாரையும் விட அதிகமாக ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓர் அறிவிப்பு செய்துள்ளான்:**

**நஹ்னு அவ்லியாவு(க்)கும் ஃபில் ஹயா(த்)திதுன்யா வஃபில்ஆகிர(த்)தி. வல(க்)கும் ஃபீஹா மா தஷ்தஹீ அன்ஃபுஸ(க்)கும் வல(க்)கும் ஃபீஹா மா(த்)தத்தவூன்** – நாங்கள் இவ்வுலக வாழ்க்கையிலும் மறுமையிலும் உங்கள் நண்பர்கள்; உங்கள் மனங்கள் விரும்புவதெல்லாம் அதில் உங்களுக்குக் கிடைக்கும். மேலும் நீங்கள் கேட்பதெல்லாம் அதில் உங்களுக்குக் கிடைக்கும். **(41:32)**

இது முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கே பொருந்தும். வானங்களும், பூமியும் அவர்களுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளன. அவர்களின் மரணம் வரை அல்லாஹ் அவர்களுக்கு வலி ஆக இருப்பதன் காட்சியை காட்டி வந்துள்ளான். அவர்களின் விருப்பம் இவ்வுலக வாழ்க்கையிலேயே முழுமையடைந்தது. முழுமையான **ஷரீஅத்** அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. காத்தமுல் அன்பியா (நபிமார்களுள் சிறந்தவர்) என்றழைக்கப்பட்டார்கள். அவர்களின் மார்க்கம் உலகில் நிரந்தரமாக நிலைநாட்டப்பட்டது. அல்லாஹ் அவர்களிடம் **யஃஸிமுக மினன்னாஸ்** – மக்களிடமிருந்து உம்மைக் காப்பாற்றுவான் (5:68) என்ற வாக்குறுதி அவர்களுக்கு கொடுக்கப்பட்டதிலிருந்து ஒவ்வொரு பிரச்சனையிலிருந்தும் நஷ்டத்திலிருந்தும் காப்பாற்றினான்.

ஹிஜ்ரத்தின் போது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் பயத்தை வெளிப்படுத்திய போது அவர்களை நோக்கி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**லாதஹ்ஸன் இன்னல்லாஹ மஅனா...** – பயப்படாதீர்; அல்லாஹ் நம்முடன் இருக்கிறான் **(9:40)**

இவ்வாறு கூறி ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு ஆறுதல் அளித்தார்கள். அன்னாரின் தூய்மையாக்கும் ஆற்றல் அன்னாரின் விளைவாக அவர்களின் தோழர்களும் கூட தூய்மையாக்கும் ஆற்றலை பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு உடன் இருந்ததன் விளைவால் ஒரு சிறப்பான ஸ்தானம் இருந்தது. ஆனால், பொதுவாக சஹாபாக்கள் இறைவனது வலி ஆக மாறி அவன் தமக்கு வலி ஆகி விட்ட காட்சியை கண்டனர்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் குவ்வத்தே குத்ஸியாவின் காரணமாக இன்று வரை அந்தக் காட்சியைக் காட்டிக் கொண்டே தான் இருக்கிறான். ஒவ்வோர் அடியிலும் அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் இக்காட்சியைக் காண்கின்றனர். ஒவ்வொரு அடியிலும் இறைவனுக்காக களங்கமற்ற தூய்மையுடன் விளங்குபவர்கள் இக்காட்சியை காண்கின்றனர். அல்லாஹ் இக்காலத்தில் முஹம்மதிய மஸீஹை அனுப்பினான். அவர் அல்லாஹ்வின் நட்பு, நெருக்கத்தைப் பெற்றார். ஈமானின் முன்னேற்றத்தின் காட்சி தென்படத் தொடங்கியது.

இப்போது இந்த இறைவனது வலி என்ற பண்பின் வெளிப்பாட்டிற்காக சில சம்பவங்களை எடுத்து வைக்கிறேன். முதலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் சம்பவங்கள் அதற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்களின் சில சம்பவங்களைக் கூறுவேன். அதிலிருந்து அல்லாஹ்வுக்கு அடியார்களுடன் உள்ள தொடர்பு வெளிச்சமாகிறது. எவ்வாறு அவர்களின் வாழ்விலும், அல்லாஹ் அவர்களுக்கு வலி ஆக இருந்தான்? அத்தூயவர்களின் மரணத்திற்குப் பிறகும் கூட உலகின் தாக்குதல்களிலிருந்து எவ்வாறு அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றினான் என்பதை அந்த சம்பவங்களிலிருந்து விளங்கலாம்.

ஒருவர் செய்த துஆவின் பயன் இவ்வுலகத்தோடு நின்றுவிடாமல் அவரது மரணத்திற்குப் பிறகு கூட அல்லாஹ் அவரது விருப்பத்தை நிறைவேற்றி வைத்துள்ளான். முதலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சஹாபி ஹஸ்ரத் ஸுபைர் உடைய சம்பவத்தை எடுத்து வைக்கிறேன். அப்துல்லாஹ் பின் ஸுபைர் என்பவர் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களின் மகன் ஆவார். அவர் அறிவிக்கின்றார்:

ஒட்டகப் போர் நடைபெற்ற வேளையில் நான் ஹஸ்ரத் ஸுபைர் உடைய பக்கத்தில் நின்றேன். அன்னார் என்னிடம் கூறினார்கள். மகனே, இன்று அநீதியிழைத்தவர், அநீதியிழைக்கப்பட்டவர் இருவருமே கொலை செய்யப்படலாம். நான் நிச்சயமாக அநீதி இழைக்கப்பட்டவனாக கொலை செய்யபப்படலாம் என்று நினைக்கிறேன். நான் எனது கடன்களைக் குறித்து கவலைப்படுகிறேன். நான் மரணித்து விட்டால் எனது கடனை நீ அடைக்க வேண்டும். மேலும் கடன் அடைபடாமல் இருந்தால் எனது சொத்தை விற்று கடனை முழுமையாக அடைத்து விடும். எனது சொத்தில் மூன்றில் ஒரு பகுதியை நீர் (அப்துல்லாஹ் பின் ஸுபைர்) எடுத்துக் கொள்ளும்.

அப்துல்லாஹ் பின் ஸுபைர் கூறுகின்றார்கள்: இவ்வாறு எனது தந்தை தனது கடனைப் பற்றி திரும்பத் திரும்ப வலியுறுத்தினார்கள். மகனே, பிறகும் கூட எனது கடன் தரப்படாமல் எஞ்சி விட்டால் எனது எஜமானனிடம் கேள். உடனே எனது தந்தை கூறியதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. உடனே எனது தந்தையே, உங்கள் எஜமானன் யார்? என்று நான் கேட்டேன். அவர்கள் கூறினார்கள். அல்லாஹ். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் கூறுகிறார்கள். இறைவன் மீது ஆணை. கடனை அடைக்கும்போது எனக்கு சிறு சிரமம் ஏற்பட்டது. நான் இவ்வாறு துஆ செய்தேன். சுபைரின் எஜமானனே. அவரது கடனை அடைக்க எனக்கு உதவி செய். உடனே இறைவன் உதவி செய்தான். முழு கடனையும் அடைத்து விட்டேன்.

இதுவே அல்லாஹ் தனது அடியார்களுக்கு வழங்கும் நட்பின் நடைமுறையாகும். தனது நண்பனின் மரணத்திற்குப் பிறகும் கூட அவனைப் பற்றி பிறர் எவரும் விரல் உயர்த்த அவன் அனுமதிப்பதில்லை. எந்த பலவீனம், கடன்களின் காரணத்தாலும் அம்மக்கள் மீது ஆட்சேபணை எழ வாய்ப்புத் தரவில்லை. தேவை ஏற்படும் போது கடனை அடைக்க ஏற்பாடு நடந்து விட்டது.

இன்னொரு வியப்பான சம்பவம். ஒரு சஹாபியின் விருப்பத்திற்கேற்ப எவ்வாறு அவர் ஷஹீதான பிறகு கூட காஃபிர்களின் கையிலிருந்து அவரை காப்பாற்றினான் என்று விளக்குகிறது. இந்த சம்பவம் ஒரு ஷஹீதுடைய சம்பவம். ஒரு கோத்திரத்தால் பத்து சஹாபாக்களை மார்க்கப் பயிற்சி கொடுப்பதற்காக வருமாறு ஏமாற்றி அழைத்துச் சென்று ஷஹீதாக்கினார்கள். அதில் இரு பையன்களையும் ஷஹீதாக்கி விட்டனர். அஹ்ஸன் பின் ஸாபித் என்பவரும் அதில் இருந்தார். அவர் எதிரிகளுடன் சண்டையிட்டு சண்டையிட்டு ஷஹீதாகி விட்டார். அஹ்ஸன் பின் ஸாபித் இறந்ததும் எதிரி கோத்திரத்தார் அவரது தலையை கொய்து எடுத்து சென்று விட விரும்பினார். ஸுபாஃபா பின் ஸாத் இடம் அதனை கொடுக்க விரும்பினார். அப்பெண் அஹ்ஸன் பின் ஸாபித்தின் மண்டை ஓட்டில் மது அருந்துவேன் என்று சபதம் எடுத்திருந்தாள். ஏனெனில் உஹதுப் போரில் அப்பெண்ணின் இரு மகன்களை ஹஸ்ரத் அஹ்ஸன் பின் ஸாபித் கொன்றிருந்தார்கள். அஹ்ஸனின் தலையை அவர்களால் எடுத்துச் செல்ல முடியவில்லை. அவர்களின் தலையைச் சுற்றி தேனீக்கள் சூழ்ந்து விட்டன. ஷஹீதாகி விழுந்தவுடனேயே அவர்களை எதிரிகள் எடுக்க விரும்பினர். ஆனால் தேனீக்கள் அவரது உடலை தமது ஆதிக்கத்தில் எடுத்துக் கொண்டார். பிறகு இரவில் வந்து எடுத்துச் செல்லலாம் என்று எதிரிகள் நினைத்தனர். இரவிலும் முடியவில்லை. பெருமழை பெய்து, வெள்ளம் அவரது உடலை எடுத்துச் சென்று

விட்டது. ஹஸ்ரத் அஹ்ஸன் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றதும் இறைவனிடம் இனிமேல் எந்த ஒரு முஷ்ரிக்கையும் நான் தொடமாட்டேன். எந்த முஷ்ரிக்கும் என்னை தொடவும் விடமாட்டேன் என்று ஓர் உறுதி எடுத்திருந்தார். அதன் மூலம் தாம் தூய்மை இழக்கவில்லை என்று கருதினார். இவ்வாறு அவர்களது மரணத்திற்குப் பிறகு கூட அல்லாஹ் அவர்களது விருப்பத்தை நிறைவேற்றினான்.

பிறகு இன்னொரு சம்பவம். இறைவன் எவ்வாறு பசியைப் போக்க உதவி செய்கிறான் என்பதை இது விளக்குகிறது. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு படைய ஹஸ்ரத் அபூஉபைதாவை எமது அமீராக்கினார்கள். குறைஷிக் காஃபிர்களை தடுத்து நிறுத்துவது எமக்கு இடப்பட்ட பணியாகும். வழி உணவாக சிறு பையில் சிறு பேரீத்தம்பழத்தை உண்டு தண்ணீர் குடித்துக் கொண்டனர். சில நேரங்களில் வயிறு நிரப்புவதற்காக மரங்களில் கல்லெறிந்து விழுபவற்றை தண்ணீரில் நனைத்து உண்டனர். ஒருநாள் ஒரு கடற்கரை ஓரமாக நாங்கள் சென்ற போது மிகப்பெரிய மீன் ஒன்றைக் கண்டோம். இது செத்தது. இதனை சாப்பிடக் கூடாது என்று அபூ உபைதா கூறினார். சிறிது நேரத்திற்குப் பிறகு கூறினார். நீங்கள் அல்லாஹ்வின் ரஸூலினால் அனுப்பப்பட்டுள்ளீர்கள். அல்லாஹ்வுடைய பணிக்காக அனுப்பப்பட்டுள்ளீர்கள். நீங்கள் இதனை உண்ணலாம். அது பெரிய மீன். ஒரு மாதம் அதனை வைத்து நாங்கள் உண்டோம். 300 பேர் இருந்தோம். பெரிய மீன். அதிலிருந்து அதன் எலும்புகளினூடே ஒருவர் ஒட்டகத்தின் மீது ஏறியவாறு கடந்து செல்லலாம். அவ்வளவு பெரிய உணவை இறைவன் ஏற்பாடு செய்தான். நபி (ஸல்) அவர்களிடம் இவ்விபரம் சொல்லப்பட்டதும் நீங்கள் செய்தது (உண்டது) சரிதான். அதில் ஏதாவது ஒரு துண்டு மிச்சமிருந்தால் கொண்டு வாருங்கள். நானும் உண்கிறேன் என்றார்கள். ஏனெனில் இறைவன் இந்த உணவை உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ளான். இதுவே அவனது நடைமுறை. அவனது வழியில் செல்பவர்களுக்கு அவனே உணவுக்கான ஏற்பாடு செய்துவிடுகிறான்.

பேரீத்தம் பழமும் தண்ணீரும் உண்டு காலம் கடத்திக் கொண்டிருந்த வேளையில் அல்லாஹ் உணவையும் ஏற்பாடு செய்து தந்தான். எண்ணெய்யும் ஏற்பாடு செய்தான்.

இறைவன் மீது ஈமான் கொண்டு அவன்மீது ஈமான் கொள்பவர்களுக்கு அவன் எவ்வாறு உணவு வழங்குகிறான் என்பதை யாராலும் எண்ணிக்கூட பார்க்க இயலாது. அல்லாஹ்வின் வாக்குறுதியை அவன் நிறைவேற்றுவதை பார்க்கும்போது நமது உறுதி மேலும் மேலும் அதிகமாகிறது. அவன் இவ்வுலகிலும் வலியாக இருப்பதை நிறைவேற்றி காட்டுகிறான். மறுமையிலும் அவ்வாறே தனது வாக்குறுதியை நிறைவேற்றிக் காட்டுவான்.

நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமையாக அல்லாஹ் இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். **வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம்** - இவர்களுடன் சேராத பின்னுள்ள மக்களில் இருந்தும் (62:3) என்ற தனது வாக்குறுதிக்கேற்ப தனது இப்பண்பை இக்காலத்திலும் வெளிப்படுத்தினான்.

தக்வாவின் வழியில் நடப்பவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உருவாக்கியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தினார்கள்.

தக்வாவின் படி செல்பவர்களுக்கு இன்றும் கூட அந்நடைமுறை இறைவனால் செயல்படுத்தப்படுகிறது. நான் இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில சஹாபிகளின் சம்பவங்களை எடுத்துரைக்கப் போகிறேன். இது வியப்பான சம்பவமாகும். ஹஸ்ரத் இத்ருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். இவரைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இவர் ஜலந்தரிலிருந்து வந்திருந்தார். மிஸ்ரிஸாஹ் என்றழைக்கப்பட்ட ஒருவர் வந்திருந்தார். அவர் அங்கு ஸபேதார் ஆக இருந்த ஒருவரின் மகன் ஆவார். டாக்டர் சாஹிப் அவரைப் பற்றி கேள்விப்பட்டு அவரிடம் சென்றார்கள். அவர் டாக்டர் சாஹிபிடம், நீங்கள் ஒரு வலி ஆக விரும்பினால் காதியான் செல்லுங்கள் என்றார்.

அன்னார் 1899 -ல் தமது பைஅத் கடிதத்தை காதியானுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பினார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பெரும் மார்க்க அறிஞராக இருந்தார்கள். அவர்களைப் பற்றி மவ்லானா ராஜேகி சாஹிப் உடைய ஒரு அறிவிப்பு எழுதப்பட்டுள்ளது.

சவுத்ரி நவாப் கான் சாஹிப் தாசில்தாரான அஹ்மதி ஆவார். குஜராத்திலிருந்து மாறுதல் பெற்று ராஜேகி வரும் போது எம்முடன் தங்குவார்கள். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உடைய உண்மையைப் பற்றி எப்போதுமே குறிப்பட்டு வருவார்கள். ஒரு நாள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும் போது நவாப் கான் சாஹிப் ஒரு சம்பவம் என்னிடம் கூறினார். நான் ஒரு முறை ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் அவர்களிடம், மவ்லவி சாஹிபே! தாங்கள் முன்னரே மார்க்க அறிஞராகவே இருந்தீர்கள். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபிடம் பைஅத் செய்ததனால் என்ன பலனைப் பெற்றீர்கள்? உடனே மவ்லானா ஹக்கீர் நூருத்தீன் சாஹிப் கூறினார்கள். நவாப் கான் சாஹிப்! எனக்கு மிர்ஸா சாஹிப் இடம் பைஅத் செய்ததனால் நிறைய பயன்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று, நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கனவில்தான் கண்டு வந்தேன். ஆனால் இப்போது வெளிப்படையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கண்டு வருகிறேன்.

மேலும் ஹஸ்ரத் நூருத்தீன் சாஹிப் கூறினார்கள். எனக்கு ஹஸ்ரத் மிர்ஸா சாஹிபிடம் கொண்ட தொடர்பினால் உலக விருப்பங்கள் முற்றிலும் குளிர்ந்து போய் விட்டன. இவையனைத்தும் மிர்ஸா சாஹிபின் தொடர்பு மற்றும் அவர்களின் தூய்மையாக்கும் ஆற்றலின் விளைவால் ஏற்பட்டன.

இன்னும் சில சம்பவங்களை கூற விரும்புகிறேன். ஹஸ்ரத் குலாம் ரஸூல் ராஜேகி சாஹிப் ஒரு சம்பவம் எழுதுகிறார்கள்: ஒருமுறை சவுத்ரி அல் ஹூதா சாஹிப் என்னிடம், சில பெரியவர்களின் துஆவினால் சிலருக்கு பொருள் உதவி கூட கிடைக்கிறது என்று ஒரு செய்தி பிரபலமாக உள்ளது. அது சரியா? என்று கேட்டார்கள்.

நான் சொன்னேன். சரிதான். சில நேரங்களில் மனிதனுக்கு ஒரு விசேஷமான ஆன்மீக நிலை ஏற்படுகிறது. அப்போது அம்மனிதரிடம் எழுத்து மூலமாகவும் வாய்மொழியாகவும் கூறப்பட்ட எல்லா துஆவும் வேண்டுகோள்களும் அல்லாஹ்வின் கட்டளையால் நிறைவேறி விடுகின்றன.

எனது இக்கூற்றை கேட்டு விட்டு சவுத்ரி அல் ஹூதா சாஹிப், அப்படியானால் எனக்காக ஒரு துஆவை எழுதுங்கள். எனக்கு சில பொருளாதார நெருக்கடிகள் உள்ளன என்றார். உடனே, சரி எனக்கு அந்த குறிப்பிட்ட ஆன்மீக உயர்நிலை வரும் போது உங்களுக்காக நான் துஆக்களை எழுதுவேன் என்று நான் கூறினேன்.

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக இந்த ஆன்மீக ஆற்றலைப் பெற்றிருந்தேன். எனக்கு அக்குறிப்பிட்ட நிலை ஏற்பட்ட போது நான் சவுத்ரி அல் ஹூதா சாஹிப் அவர்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கேற்ப நான் அவருக்காக இவ்வாறு துஆ வாசகங்களை எழுதினேன்.

**அல்லாஹும் மக்ஃபிர்னி பிஹலாலிக்க அன்ஹராமிக்க வஅக்னினி பி ஃபழ்லிக்க அம்மன்ஸிவாக**. இந்த துஆவை எப்போதும் உங்கள் கையில் வைத்திருங்கள். இதனை வைத்து துஆ செய்து கொண்டிருங்கள். தலைப்பாகை விரிப்பில் அதனை கட்டி பாதுகாத்து அந்த சீட்டை வைத்துக் கொண்டேன்.

அல்லாஹ்வுடைய பேரருளாலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வெகுமதியாலும் ஒரு வருடம் வரை அவருக்கு பயன் கிடைத்து வந்தது. துரதிஷ்டவசமாக அந்த காகிதம் அவரை விட்டு காணாமல் போய் விட்டது. அவருக்கு கிடைத்து வந்த சிறப்பான அருள்களும் முடிந்து விட்டன.

பிறகு இஸ்மாயில் சாஹிப் அறிவிக்கின்றார்கள்; எனது பையனுக்கு அவன் பிறந்த சமயத்தில் கத்னா செய்யப்பட்ட போது செய்பவரின் தவறால் கத்தி நரம்பில் பட்டு விட்டது. இரத்தம் அதிகமாக வெளியேறி விட்டது. பையன் பால் குடிக்கவில்லை என்பது மட்டுமன்றி குழந்தை அசையவும் கூட சக்தி இல்லாமல் போய் விட்டது. கண்கள் நிலைகுத்தியிருந்தன. வெளிப்படையாக பையன் ஒரு பிரேதம் போன்று படுத்திருந்தான். பதற்றத்தில்

நான் பெரியவர்களிடம் துஆ செய்யுமாறு வேண்டிக் கொண்டிருந்தேன். அவ்வாறு செல்லும் போது தற்செயலாக மவ்லவி ஹஸ்ரத் ஷேர் அலி சாஹிப் என்னை விட்டு கடந்து சென்று கொண்டிருந்தார்கள். நான் அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினேன். பிறகு நிலைமைகளை எடுத்துரைத்து துஆ செய்யுமாறு வேண்டினேன்.

ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அதே இடத்தில் கையை உயர்த்தி துஆ செய்தார்கள். கணிசமான நேரங்கள் துஆவில் மூழ்கி இருந்தார்கள். அவர் துஆவிலிருந்து வெளியே வந்ததும், நான் வீடு திரும்பி மனைவியிடம், குழந்தைக்கு சிறிது பால் குடிக்கக் கொடு என்று கூறினேன். சிறுவன் எந்த நோயின் அறிகுறியும் இன்றி ஆரோக்கியமான குழந்தையைப் போன்று பால் அருந்தினான்.

நான் ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்களின் துஆவின் விளைவைக் கண்டு வியந்து போனேன். எனது ஈமானும் உறுதியாகியது.

ஹஸ்ரத் முஹம்மது ஹுசைன் ஜெஹ்லமி அவர்கள் கூறுகின்றார்கள். இதுவும் மவ்லவி ஷேர் அலி சாஹிப் அவர்களின் சம்பவமேயாகும்.

ஒருமுறை மவ்ஸார்டில்வால் பகுதியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். அங்கு ஒரு அஹ்மதி அல்லாத பெண்ணிற்கு திருமணமாகி பல வருடங்கள் ஆகியிருந்தன குழந்தைகள் இல்லை. மவ்லவி சாஹிப் உடைய சிறப்பம்சங்கள் குறித்து அப்பெண்ணிற்கு தெரிய வந்தது. உடனே அப்பெண் மவ்லவி ஷேர் அலி சாஹிபிடம், தனக்கு ஒரு தஃவீஸ் தருமாறு கூறினாள். நான், மவ்லவி சாஹிப் தஃவீஸ் தருவதில்லை. ஆனால் அவர்களிடம் நான் உன் பொருட்டு துஆ செய்யுமாறு கூறுகிறேன் என்று பதில் அளித்தேன்.

அப்பெண் திரும்பி சென்று விட்டாள். நான் ஸ்டேஷனில் சென்று மவ்லவி ஷேர் அலி சாஹிபிடம் நடந்த சம்பவத்தை கூறி, துஆ செய்யுமாறு வேண்டிக் கொண்டேன். அன்னார் அதே இடத்தில் அப்பெண்ணுக்காக துஆ செய்வதற்கு கையை உயர்த்தினார்கள். அவர்களின் துஆவின் தாக்கம் ஏற்பட்டது. ஒரு வருடத்தில் அப்பெண்ணுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பிறகு மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் ராஜேகி அறிவிக்கிறார்கள். செய்யதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததன் விளைவாக எனக்கு பல அருட்கள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்று, எனது வாயிலிருந்து ஏதேனும் ஒரு வார்த்தை தேவையுடையவர்கள், நோயாளிகளுக்காக அவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்காக ஒரு துஆ வெளிப்பட்டால் இறைவன் அம்மக்களின் மீது அருள்புரிந்து அவர்களின் தேவையை நிறைவேற்றி விடுகின்றான்.

இவ்வாறு ஒரு சம்பவம் மவ்லவி சஅதுல்லா பூர்வியா என்ற ஒருவர். இவர் சவுத்ரி அல் ஹூதா சாஹிப் உடைய சகோதரர் மகன் ஆவார். அஹ்மதிய்யத்தை அதுவரை அவர் ஏற்றிருக்கவில்லை. ஒரு பள்ளியில் சுவரில் சாய்ந்து கொண்டிருந்தார். அவரது நோய்க்கு சிகிச்சையில்லை என்று டாக்டர்கள் கூறிவிட்டதால் மிகவும் விரக்தியுற்று அமர்ந்திருந்தார். மிகவும் வேதனையும் இருந்தது. நான் அவரிடம் கூறினேன். சிகிச்சையில்லாத நோய் எதுவும் இல்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கும்போது நீர் ஏன் இதற்கு சிகிச்சையே இல்லை என்கிறீர் என்று கேட்டேன். விரக்தியைத் தவிர எனக்கு வேறு என்ன வழியிருக்கிறது? என்று கேட்டார். நான் கூறினேன். நமது இறைவன் **பஃஆலுல் லிமா யுரீது** - தான் நினைப்பதை செய்பவன் ஆவான் (85:17)

**லா யய்அஸூ மிர்ரூஹில்லாஹி இல்லல் கவ்முல் காஃபிரூன்** - அல்லாஹ்வின் அருளில் நிராசையடைந்து விடாதீர்கள். அல்லாஹ் அருளில், நிராகரிப்பவர்களைத் தவிர வேறெவரும் நிராசையடைவதில்லை. (12:88)

ஈமானும் நிராசையும் ஒன்றுசேர இயலாது. எனவே நீர் நிராசையடையாதீர் என்று கூறி ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கேட்டு வாங்கி அதில் ஓதி ஊதினேன். இறைவனது **ஷாஃபி** - குணமளிப்பவன் என்ற பண்பை நினைத்து தண்ணீரில் ஊதினேன். இறைவனது அப்பண்பின் அருள் சூரிய கதிர்களைப் போன்று தண்ணீரில் இறங்கக் கண்டேன். அல்லாஹ்வின் அருளாலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின்

பரக்கத்தாலும் இத்தண்ணீர் குணமளிக்கும் பொருளாக மாறி விட்டது என்ற உறுதி எனக்கு ஏற்பட்டது. அந்த தண்ணீரை சவுத்ரி அல்ஹுதா சாஹிப் அருந்தினார். அவரது நோய் நீங்கியது. அல்லாஹ் சவுத்ரி சாஹிபுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்கும் வாய்ப்பையும் வழங்கினான். அவர் அஹ்மதியாக மட்டும் மாறவில்லை. ஒரு தூய்மையான அஹ்மதி முபல்லிக் ஆகி விட்டார்.

இன்னொரு சம்பவம். நமது ஊரில் வடக்கில் 2 மைல் தூரத்திலுள்ள மவ்ஸா ஜாமுன்போலா என்ற ஊர். அங்குள்ள மக்களில் பெரும்பாலார் சில பெரியவர்களின் சீடர்களாக விளங்கினர். ஆதில் ஜுவன் கான் என்பவர் தமது ஒரு வினோதமான நோய் மற்றும் அந்நோயின் குணம் பற்றி குறிப்பிடுகிறார். அவ்வூரில் மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் ராஜிகிக்கும் எதிர்ப்பு இருந்தது. இந்நிலையில் அங்குள்ள ஒரு மனிதருக்கு வந்த நோய்க்கு மல்வவி சாஹிப் மட்டுமே சிகிச்சை அளிக்க முடியும் என்று அவரிடம் கூறப்பட்டது. மவ்லவி சாஹிப் அவர்கள் வந்து அவருக்கு துஆ செய்த போது சிறிது நேரம் நோய் குணமாகியது. மவ்லவி சாஹிப் ஊர் திரும்பியதும் நோயாளிக்கு மீண்டும் நோய் திரும்பியது. உடனே மவ்லவி சாஹிபுக்கு சிறப்பான ஒரு துஆவை அவருக்கு செய்த போது அவருக்கு நோய் முற்றிலும் குணமாகியது.

பலர் வந்து மருத்துவம் செய்தும் குணமாகாத அந்த நோய் மிர்ஸா சாஹிபின் ஒரு சீடரின் துஆவினால் குணமாகியது. இவ்வாறு ஜுவன் கான் உடைய இந்த அற்புத குணமாகுதலைக் கண்டு அவரது தந்தை மவ்லவி குலாம் ரஸூல் சாஹிப் ராஜேகி அவர்கள் சிறிது காலம் தமது வீட்டில் வந்து தங்க வேண்டும் என்று அழைத்தார். உடனே குலாம் ரஸூல் சாஹிப் ராஜேகி வந்தவுடனே அந்த நோயாளியின் நிலைமை பற்றி அறிவித்தார்கள். அவருக்காக தொழுது துஆ செய்தார்கள். பிறகு அவரது நிலையை விசாரித்தார்களா. இப்போது அவரிடம் நல்ல குணம் தெரிகிறது. பசி எடுக்கிறது. கை கால்களில் அசைவும் ஏற்பட்டது. சில நாட்கள் மவ்லவி சாஹிப் அவ்வீட்டில் இருந்ததும் அந்நோயாளி எழுந்து நடக்கத் தொடங்கினார். அவரது பலவீனமான உடலில் உயிரோட்டம் தொடங்கியது. இந்த அடையாளம் கண்டதும் மக்களுக்கு அஹ்மதிய்யத்தைக் குறித்து ஓர் நல்ல அபிப்பிராயம் உருவாகியது. இருந்தும் ஒருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத்திற்காக வரவில்லை.

மவ்லவி சாஹிப் அப்போது கூறினார்கள். இந்நோயாளியின் ஆரோக்கியம் குணம் பெறுதல் இம்மக்களுக்கு ஒரு சாட்சியாகவே கிடைத்ததாகும். இம்மக்கள் இந்த அடையாளத்தை கண்டும் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ள வரவில்லை எனில் அந்த நோயாளி இதே ஷஃபானில் 18 ஆம் நாள் நள்ளிரவுக்குள் கபரில் போடப்படுவார் என்று இறைவன் எனக்கு இல்ஹாம் மூலம் அறிவித்தான். நான் கண்விழித்ததும் இச் செய்தியை அஹ்மதியல்லாதவர்களிம் கூறி துஆ செய்து விட்டு இந்த முன்னறிவிப்பை குறிப்பிட்ட அந்த நாளுக்கு முன் வெளிப்படுத்த வேண்டாம் என்று கூறினேன்.

பிறகு நான் காதியானுக்கு போய் விட்டு திரும்பி வந்தேன். அங்கேயே ரமலான் மாதம் கழிந்தது. ஷஃபான் மாதம் அடைந்ததுமே நான் சொல்லியிருந்த முன்னறிவிப்பை கேட்ட மக்களிடமிருந்து ஆட்சேபனை எழுந்ததும் அவரது வீட்டாரும் எதிர்த்துப் பேச தொடங்கினர். மறு ஷஃபான் குறிப்பிட்ட அதே 18, 19 நடுவில் அம்மனிதர் இறந்து விட்டார். அவரது மரணத்திற்குப் பிறகு அஹ்மதியல்லாதவர்கள் இதனைக் கூறி வியந்தனர். ஆனால் அதற்குப் பிறகும் கூட அந்த அடையாளத்தைப் பார்த்தும் அவரது உறவினரோ ஊர்க்காரர்களோ அஹ்மதி ஆகவில்லை.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் என்ன கேட்டாலும் அவரது துஆக்கள் உடனே ஏற்றுக் கொள்ளப்பட்டன. சிறிதும் தாமதிக்காமல் கிடைத்தன. உனக்கு எப்போது தேவை ஏற்படுமோ அப்போது நாம் உமக்கு தருவோம் என்பது இறைவனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியாகும்.

**ஒரு முறை முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்:**

ஒருவர் என்னிடம் வந்து 200 ரூபாய தந்து 2 வருடங்களுககு இதனை அமானிதமாக வைத்துக் கொள்ளுமாறு கூறினார். நான் இரண்டு வருடம் கழித்து உங்களிடம் வந்து வாங்கிக் கொள்வேன். அதே

வேளையில் இன்னொரு மனிதர் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் 100 ரூபாய் கடன் தருமாறு கேட்டவாறு அருகில் அமர்ந்திருந்தார். 200 ரூபாய் வந்ததும் அதிலிருந்து 100 ரூபாயை கடன் கேட்டவரிடம் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வழங்கினார்கள். மீதித் தொகையை சட்டைப் பையில் அப்படியே வைத்து விட்டார்கள். 200 ரூபாய் தந்து இரண்டு வருடம் கழித்து வாங்குவதாக கூறிய மனிதர் சிறிது காலம் கழித்து திரும்பி வந்தார். நான் எனது எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டேன். நான் கொடுத்த தொகையை தாருங்கள் என்று கேட்டார். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அம்மனிதரிடம், நீங்கள் எப்போது போவீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர் ஒரு மணி நேரம் இங்கிருந்து விட்டு புறப்படுவேன் என்றார்கள். முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அம்மனிதருடன் தான் அமர்ந்திருந்தார்கள். ஒரு மணி நேரம் கழிந்ததும் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அம்மனிதரிடம் பாருங்கள், ஒரு மனிதனை நம்புவது எவ்வளவு பெரிய தவறு. நான் அந்த தவற்றை செய்து விட்டேன். எனது இறைவன் நான் தவறு செய்ததை அறிவித்து விட்டான். இப்போது எனது இறைவன் எனக்கு எப்படி உதவி செய்கிறான் பாருங்கள் என்றார்கள். வேறு ஒரு வழியாக அப்போது அவர்களுக்கு 100 ரூபாய் ஒரு மணி நேரத்திற்குள் கிடைத்தது. அதனை இறைவன் வழங்கி விட்டான்.

**காஸி அப்துர் ரஹீம் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

நான் பொதுவாக இஷாவுக்குப் பிறகு எனது வீட்டின் முன் மக்களிடம் தப்லீக் செய்வேன். என் வீட்டின் முன் ஒரு மஜ்லிஸை ஏற்படுத்துவேன். ஒரு நாள் ஓர் இந்து குழப்பவாதியாக இருந்தான். அவன் கேட்ட ஒரு கேள்விற்கு பதில் அளிக்கும் போது நபிமார்களின் உதாரணம் ஒன்றை கூறி விளக்கினேன். நான் கூறிய பதிலைக் கேட்டு முஸ்லிமைப் பார்த்து அந்த இந்து சைகை செய்தார். உடனே என்னுடன் இருந்தவர்களுள் ஒரு முஸ்லிம், மிர்ஸா சாஹிபுக்கு நபிமார்களின் ஓர் உதாரணம் தருகிறீர் என்று கேட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மிகவும் கடுமையான வார்த்தைகளால் ஏசினார். என்னையும் ஏசினார். என்னை அடித்தும் விட்டார். என்னை இழிவுபடுத்தியதை நான் பொருட்படுத்தவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைத் திட்டியது எனக்கு மிகவும் துயரத்தை ஏற்படுத்தியது. இரவு முழுவதும் நிம்மதியிழந்து தவித்தேன். அல்லாஹ்வின் அடையாளத்தைப் பாருங்கள். ஒரே இரவில் பெருமழை பெய்தது. மறுநாள் அதிகாலையில் என்னை திட்டிய அம்மனிதரின் வீட்டின் முன் ஒருவர் நின்று ஒருவர் அவரை கடும் வார்த்தையால் ஏசி வீட்டிற்கு வெளியே வருமாறு அழைத்தார். அவர் ஒரு அரசு அதிகாரி ஆவார். அக்காலத்து காவல்துறை அதிகாரிகள் இங்கிலாந்துக் காரர்களைப் போன்று மிகவும் மென்மையாக நடந்து கொள்வதில்லை. பெரும்பாலும் கடுமையாக சர்வாதிகாரி போன்று நடந்து கொள்வார்கள். அசுத்தமானவர்களாகவும் இருப்பர். போலீஸ் வந்தது. அவரை அடித்து இழுத்துக் கொண்டு சென்றனர். இரவில் படகு ஓட்டுவதற்கு தடையிருந்தது. இவரைச் சார்ந்தவர்கள் இரவில் படகை ஓட்டினர். கடுமையான மழையின் காரணத்தால் இரவில் பெருவெள்ளம் ஏற்பட்டு படகு மூழ்கி விட்டது. இதற்காக இரவோடு இரவாக அந்த மனிதர் காவல்துறையினரால் அடித்து இழுத்துச் செல்லப்பட்டார். காவல்துறையினர் அவரை ஏசவும் செய்தனர்

**மாஸ்டர் அப்துர் ரஹ்மான் சாஹிப் கூறிய ஒரு சம்பவம்.**

ஒருமுறை காதியானில் இந்து பஜாரில் நடந்து கொண்டிருந்தார். கடும் வெயில் அடித்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சந்தித்த போது அவர்களிடம், கடுமையான வெயில் அடிக்கிறது. நீங்கள் எப்போதும் துஆவின் பரக்கத்தை கூறுகிறீர்கள். துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லா வல்லமையும் உள்ளவன் என்றும் கூறுகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டனர். அவர்களது விண்ணப்பத்தில் ஒரு கேலி இருந்ததை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உணர்ந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மிகவும் ரோஷம் ஏற்பட்டது. மஸ்ஜித் அக்ஸாவுக்கு சென்று துஆவில் மூழ்கி விட்டார்கள். வானம் முற்றிலும் சுத்தமாக இருந்தது. மேகம் கூடி மழை ஆரம்பிக்கும் வரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆவை நிறுத்தவில்லை. இந்த அடையாளம் பின்னால்களில் எப்போது இந்துக்களிடம் நான் இதை குறிப்பிட்டாலும் அவர்கள் வெட்கப்பட்டு தலைகுனிந்து விடுவார்கள்.

சம்பவங்களை கூறி நேரம் மிகவும் கடந்து விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மேற்கோளைக் கூறுகிறேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர் எனது **வலி** ஐ பகைக்கிறாரோ அவர் என்னைப் பகைத்தவர் ஆவார். என்னோடு அவர் சண்டையிடத் தயாராகி விட்டார் என்று இறைவன் கூறுகிறான். ஒருவர் ஒரு மனிதருடன் நேசம் வைத்துள்ளார். அந்த மனிதரை தனது குழந்தைகளை நேசிப்பது போன்று நேசித்துக் கொண்டிருக்கிறார். அத்தகைய நேசிக்கப்பட்ட மனிதரைப் பற்றி வேறொருவர் மீண்டும் மீண்டும் அம்மனிதர் சாகட்டும் என்றோ அல்லது அம்மனிதர் உள்ளம் நோகும் வார்த்தையையோ கூறினால் அல்லது அவருக்கு துன்பம் தந்தால் இம்மனிதர் அது கண்டு எப்படி மகிழ்ச்சியடைவார்? தனது குழந்தையை தீய வார்த்தையை கூறுபவரை அல்லது மற்ற உள்ளத்தில் சஞ்சலமளிக்கும் வார்த்தையை கூறுபவரை எப்படி நேசிப்பார்? எந்த மகிழ்ச்சியும் அடையமாட்டார் என்பது அடிப்படையான விஷயமாகும்.

அவ்லியாவுல்லாஹ்க்கள் அத்ஃபாலுல்லாஹ் – அல்லாஹ்வின் குழந்தைகளின் அந்தஸ்த்தில் உள்ளவர்களாவர். அல்லாஹ்வின் ரஹ்மத் அவர்களின் மீது இறங்குகிறது. இறைவனது ரோஷம் அவர்களுக்காக பீறிட்டு எழுகிறது. தொழுகை நோன்பு எல்லாம் செய்து கொண்டே ஒருவர் இறைவனால் நேசிக்கப்பட்டவரை எப்படித்தான் இழிவுபடுத்துகிறார்? உடனே அல்லாஹ்வின் ரோஷம் எழுகிறது. அவரை எதிர்ப்பவருக்கு எதிராக அது எழுகிறது. அம்மனிதன் இறைவனால் நேசிக்கப்பட்டவருக்கு துக்கம் தர நினைக்கிறார். பிறகு அவரது தொழுகையும் அவருக்கு பயனளிக்காது. அவரது நோன்பும் அவருக்கு பயனளிக்காது.

தொழுகை நோன்பு இரண்டும் இறைவனை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக செய்கிறார் எனில் பிறகு தனது இன்னொரு செயலால் இறைவனை கோபமூட்டுகிறார்.

அல்லாஹ்வின் நேசத்திற்குரியவரை எதிர்த்து இறைவனை கோபப்படுத்தி விட்டார். இறை கோபம் விலகாதவரை – அந்த அறிவற்றவர் இறுமாந்து போயிருக்கும் அவரது தொழுகை நோன்பு பயனளிப்பதில்லை. மாறாக இறை கோபம் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இறைவனது நேசத்தை பெறுவதற்குப் பதில் இறை கோபத்தையே நாளுக்கு நாள் அதிகப்படுத்துகிறார். அந்த இறையடியோரோ இறைவனுக்கு முன்னால் முற்றிலும் தன்னை மாய்த்து இறைவனது ருபூபிய்யத் மூலம் பராமரிக்கப்படுகிறார். அல்லாஹ்வின் ரஹ்மத் அவரை மூடியுள்ளது. எந்த அளவுக்கு எனில் அவரோடு பேசுவது இறைவனோடு பேசுவது போன்று அவரது நட்பு இறை நட்பாகவும் ஆகி விடுகிறது. அத்தகைய முழுமையான மூஃமினை எதிர்த்துக் கொண்டு தன்னை ஒரு மூஃமின் என்று ஒருவர் எப்படி கூற முடியும்? மூஃமினே காமில் ஐ எதிர்த்துக் கொண்டு ஒருவர் மூஃமினே காமில் எப்படி ஆக முடியும்? பிறகு அவரை எதிர்ப்பவர் கோபத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்கள் ஆக்கப்படுகிறார். இறைவனது மாமூர்கள் (நியமிக்கப்பட்டவர்) வலி மார்களை எதிர்ப்பவர், தனது இலட்சியத்தை ஒருபோதும் அடைய இயலாது.

அத்தகைய தூய மனிதருக்கு துக்கம் தந்து நான் நிம்மதி அடைவேன் என்று கருதுபவர் மிகவும் அறிவீனமான செயலைச் செய்தவராவார். தன்னையே ஏமாற்றிக் கொள்கிறார்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்காக அன்றும் தனது ரோஷத்தைக் காட்டினான். இன்றும் காட்டுகிறான். சம்பவங்களின் மூலம் தெரிய வருவது போன்று துஆவின் போது துன்பங்கள் விலகுகின்றன. அவர் புரியாதவராக இருந்த நிலையிலும் கூட அது நடக்கிது. ஆனால் பிறகும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வாதம் உண்மையானது. அவர்களிடம் பைஅத் செய்ய வேண்டும். அவர்களுக்கு துன்பம் தரக்கூடாது என்பதை அவர்கள் புரியவில்லை. இது அல்லாஹ்வுடன் உள்ள தொடர்பாகும். இது ஒரு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நற்பெயராகும். அது இன்று வரை நிலைநாட்டப்பட்டுள்ளது. தன்னை தூய்மையாக்கிக் கொண்டவர் அதனை பெறுகிறார். இந்த தொடர்பு

ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். அவர் தூய்மையாக வேண்டும் என்பது நிபந்தனையாகும். தக்வாவின் படி நடப்பது இபாதத்தில் கவனம் செலுத்துவதே நிபந்தனையாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

ஒரு மனிதருக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புகளை அவர் பயன்படுத்தும் போது நிச்சயமாக அவர் ஒரு வலி ஆக முடியும். இந்த உம்மத்தில் மிகவும் ஆற்றலுள்ள மக்கள் தோன்றுகின்றார்கள் என்பதனை நான் உறுதியாக கூறுகிறேன். அம்மக்கள் உண்மை மற்றும் விசுவாசத்தில் நிறைந்தவர்களாக இருப்பர். எனவே எவரும் இந்த வாய்ப்பிலிருந்து விலக்கப்பட்டுள்ளதாக தன்னை ஒருபோதும் கருதவேண்டாம். இறைவன் மிகவும் மாண்பிமிக்கவன். அவனது மாண்பு மிகவும் விசாலமானது. அவனைத் தேடுபவர் அவனுக்காக வேட்கை கொண்டவர் ஒருபோதும் விலக்கப்படமாட்டார். எனவே நீங்கள் இரவில் எழுந்து துஆ கேளுங்கள். அவனது உதவியைத் தேடுங்கள். ஒவ்வொரு தொழுகையிலும் துஆவுக்கான பல சந்தர்ப்பங்கள் உள்ளன. நிற்றல், இருப்பு, சஜ்தா போன்ற அனைத்து நிலைகளும் துஆவிற்குரியவையாகும். ஐந்து முறை தொழுகைகளிலும் சுபுஹ், ளுஹர், அஸர், மக்ரிப், இஷா இந்த எல்லா தொழுகைகளிலும் துஆக்கள் கற்றுத் தரப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இறைவனது நெருக்கத்தைப் பெறவே தரப்பட்டுள்ளன.

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ஸான் பின் ஸாபித் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்** ஒரு துஆவைக் கற்றுத் தந்தார்கள்.

ஒவ்வொரு நாளும் இந்த துஆவின் மூலம் உமது வீட்டினரை கவனித்துக் கொள்ளுங்கள்.

அல்லாஹ்வே! நான் காலை வேளையில் உன் முன்னால் வந்து விட்டேன். எல்லா வாய்ப்புகளும் உன்னிடமிருந்தே கிடைக்கின்றன. எல்லா ஆற்றல்களும் உனக்கே உள்ளன. அல்லாஹ்வே! நீ தரூது அனுப்புபவர்களுக்கு நானும் தரூது அனுப்புகிறேன். நீ சபிப்பவர்களை நானும் சபிக்கின்றேன். நீயே எனது நண்பனும் உதவியாளனுமாக இவ்வுலகிலும் ஆகிரத்திலும் இருக்கின்றாய். என்னை ஈமான் கொண்ட நிலையிலும் மரணிக்கச் செய்வாயாக! சாலிஹீன்களுடன் என்னை சேர்ப்பாயாக! அல்லாஹ்வே! உனது திருப்தியை வேண்டுகின்றேன். மறுமையில் மனம் குளிர்ந்த வாழ்வு கிடைக்கவும் உனது முகத்தை கண்டு மகிழும் நற்பேற்றையும் கேட்கிறேன். நஷ்டம் இழைப்பவர்களின் நஷ்டம் சாபத்திலிருந்தும் பாதுகாப்பு தேடுகிறேன். அநீதியிழைத்தலிலிருந்தும் அநீதி இழைக்கப்படுவதிலிருந்தும், வரம்பு மீறல் செய்வதிலிருந்தும் என் மீது வரம்பு மீறல் செய்யப்படுவதிலிருந்தும், மன்னிக்க முடியாத பாவங்களை செய்வதிலிருந்தும் தப்பிக்க விரும்புகின்றேன். வானங்களையும் பூமியை படைப்பவனே! மறைவானதையும் வெளிப்படையானதையும் அறிந்தவனே! உலகிலும் என்னை உன் பொறுப்பில் நான் விடுகிறேன். உன்னை சாட்சியாக்குகிறேன். நீ அதற்கு போதுமானவன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை என்று நான் சாட்சி கூறுகின்றேன். நீ தனித்தவன். உனக்கு இணை இல்லை. எல்லா ஆட்சியும் உன்னிடமே உள்ளது. எல்லாவற்றிற்கும் நீயே ஆற்றல் உள்ளவன்.

ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் உனது அடியாரும் தூதரும் ஆவார் என சாட்சி கூறுகிறேன். உனது வாக்குறுதி உண்மையானது என்று சாட்சி கூறுகின்றேன். உனது சொர்க்கம் உண்மையானது; கபர்களில் இருப்பவர்களை நீயே எழச் செய்கிறாய். உன்னிடம் பொறுப்புச் சாட்டியவர்களுள் ஒருவனாக நான் இருப்பதாக சாட்சி கூறுகிறேன். என் எல்லா பாவங்களையும் மன்னிப்பவன் (உன்னைத் தவிர) எவரும் இல்லை. என் பக்கம் கருணையுடன் பார்ப்பாயாக! நீயே கருணையாளனும், பார்ப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனும் ஆவாய்.

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த துஆ ஆகும். நமது உள்ளத்தில் அல்லாஹ்வின் நினைவு எப்போதும் இருக்கட்டுமாக! அவனது நெருக்கத்தில் மகிழ்ச்சி அடைபவராகவும் அவனது வெகுமதிகளால் எப்போதும் ஆசீர்வதிக்கப்பட்டவராகவும் இருப்போமாக!

இன்று ஒரு பரிதாபமான செய்தி! நமது அஹ்மதி நண்பர் ரானா சலீம் அஹ்மத் சாஹிப். இவர் சங்கட் மாவட்டத்தின் நாயிப் அன்சாருல்லாஹ் ஆவார். 26 நவம்பர் (நேற்று) மக்ரிப் தொழுகைக்குப் பிறகு

பள்ளிக்கூடத்திலிருந்து வெளியில் வந்து பள்ளிக்கூடத்தின் கேட்டை மூடிக் கொண்டிருந்த போது அவரது மூக்கில் பிஸ்டலை வைத்து ஒரு பேரிழந்தவன் சுட்டு விட்டான். குண்டு தலையின் பின்புறம் வழியே வெளி வந்து விட்டது. சிறிது நேரத்தில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் அங்கு உயிரை காப்பாற்ற முடியவில்லை. இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். நன்கு படித்தவர். M.A., B.Ed. படித்தவர். கல்விப் பிரிவில் ஜமாஅத் பொறுப்பிலும் இருந்தார். பள்ளிக்கூடம் ஒன்றை நிர்வகித்து வந்தார். சங்கட் பகுதியில் பிரபலமான பள்ளிக்கூடமாக அது விளங்குகிறது. இப்போது கூட அந்தப் பள்ளிக்கூடத்தில் 1000 மாணவர்கள் படிக்கிறார்கள். அல்லாஹ்வின் அருளால் மூஸி - வஸிய்யத் செய்தவர் ஆவார். ஜமாஅத் பணியில் முன்னணியில் நிற்பவர். தஃவத்தே இலல்லாஹ் செயலர், இஸ்லாஹ் வ இர்ஷாத் செயலர் போன்ற ஜமாஅத்தின் பல்வேறு நிலையில் பணியாற்றியவர்.

2004 -ல் சங்கட் மாவட்டத்தின் நாயிப் அமீராக்கப்பட்டார். அவரது பெற்றோர் வஃபாத் ஆகி விட்டார்கள். ஒரு மனைவி இரு மகள்கள், ஒரு மகனை தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார். இவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் அழகிய பொறுமையை வழங்குவானாக! ஷஹீதின் தகுதியை உயர்த்துவானாக! திருப்தி என்னும் சொர்க்கத்தில் அவரை சேர்ப்பானாக!

இரண்டாவது மரண அறிவிப்பு காதியானின் அப்துல் லத்தீஃப் சாஹிப் தர்வேஷ் அவர்களின் மகன் அப்துர் ரஹ்மான் சாஹிப் ஆவார். இவர் 20-21 தேதிகளில் நடு இரவில் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவருக்கு வயது 82. இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியாகிய ஹஸ்ரத் முஹம்மத் ஹுஸைன் சாஹிப் கபூர்தலா அவர்களின் பேரன் ஆவார். குர்முகி தேர்வில் கியானி தேர்ச்சி பெற்று கியானி என்ற பெயரில் பிரபலமானவர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் தூண்டுதலினால் இராணுவத்தில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு காதியான் வந்தார். சில காலம் முபல்லிக் ஆகவும் பணியாற்றினார். Retirement -க்குப் பிறகு Free employee ஆகவும் நீண்ட காலம் தொண்டு செய்தார். அல் பத்ர் பத்திரிகையின் மேனேஜராகவும் இருந்தார். வகாரே அமலும் செய்து வந்தார். படிக்கும் ஆர்வம் உள்ளவர். வருவாய் குறைவாக இருந்தும் எப்போதும் மகிழ்ச்சியாக காணப்படுவார். இவருக்கு மூன்று மகள்கள் இரு மகன்கள் உள்ளனர். நூர் மருத்துவமனையிலுள்ள லேப் -ல் இவரது ஒரு மகள் பணியாற்றுகிறார். ஒரு மகள் ஷமீம் அக்தர் ஆசிரியையாகவும், காதியானின் சதர் லஜ்னாவாகவும் பணியாற்றுகிறார். இவரது இரு மகள்கள் நாயிப் நாஸிர் பைத்துல்மால் ஆக இருக்கின்றனர். சந்ததிகள் அனைவரும் ஜமாஅத்திற்குத் தொண்டு செய்யும் வாய்ப்பினை பெற்றுக் கொண்டிருக்கின்றனர். அல்லாஹ் சந்ததிகளுக்கும் கூட தந்தையின் நன்மைகளை தொடர வாய்ப்பளிப்பானாக! இவருக்கு மஃபிரத் வழங்குவானாக!

இந்த இரு மர்ஹூம்களுக்கும் ஜுமுஆவுக்குப் பிறகு ஜனாஸா (காயிப்) தொழுகை நடத்துவேன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 27.11.2009

Translated by : **Muallim M. NIZAMUDDIN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**